# இதுவரை உரிமைத் தொகை பெற்றிடாத தகுதி வாய்ந்த மகளிர், புதிதாக விண்ணப்பிக்க விரைவில் வாய்ப்பு!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உரை... 5ஆம் பக்கத் தொடர்ச்சி

உரிமை திட்டம், முதலமைச்சரின் காலை உணவு திட்டம், இல்லந்தேடி கல்வித் திட்டம் போன்றவற்றை தொடர்ந்து ஆய்வு செய்து வருகின்றன. இந்த ஆய்வுகள், அரசுத் திட்டங்களை மேம்படுத்தி, மக்கள் மேலும் பயனடைய வழிவகை செய்கின்றன.

**தமிழ்நாடு மாநிலத் திட்டக்குழு:** தமிழ்நாடு மாநிலத் திட்டக் குழுவின்மூலம், Focus Block Development Scheme 'வளமிகு வட்டாரங்கள் திட்டம்' செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம் வளர்ச்சி விகிதத்தில் பின்தங்கியுள்ள 50 வட்டாரங்களின் மேம்பாட்டுக்காக, சென்ற ஆண்டு, 100 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, 762 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

Tamil Nadu Innovation InitiativesTANI. அரசுத் துறைகளில் புதுமையை வளர்ப்பதற்கும், நடைமுறை சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் Tamil Nadu Innovation Initiativesதமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் கீழ், கடந்த நான்கு ஆண்டுகளில் 82 பணிகளுக்கு 302 கோடியே 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை!

சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் உறுப்பினர் ரவி அவர்கள் பேசும் போது ஒன்றைக் குறிப்பிட்டார். அதிமுக ஆட்சி காலத்தில்தான், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தொடங்கப்பட்டது என்று

# ஒட்டு மொத்த உலகையே திரும்பிப் பார்க்க வைத்த கார் பந்தயம்!

சொன்னார். உண்மைதான். நீங்கள் ஆணையத்தை தொடங்கி இருக்கலாம். ஆனால், விளையாட்டு மேம்பாட்டுக்கு என்று 2000 ஆவது ஆண்டிலே ஒரு தனி அமைச்சகத்தை உருவாக்கிக் கொடுத்து, அதை வளர்த்தெடுத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு இந்தியாவிலேயே எப்படி நம்முடைய தமிழ்நாடு No.1 மாநிலமாக திகழ்ந்துக் கொண்டிருக்கிறதோ அதேபோல, நம்முடைய தமிழ்நாட்டு நம்முடைய முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, இந்தியாவிலேயே நம்பர்1 இடத்தை நோக்கி பல்வேறு சாதனைகளைப் படைத்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

விளையாட்டுத் துறையில் நம் திராவிடமாடல் அரசு படைத்து வரும் சாதனைகளில் சிலவற்றை, இந்த மாமன்றத்தில் பதிவுசெய்ய விரும்புகிறேன். வெற்றி பெற்றுவிட்டால் நிச்சயமாக இந்த உலகமே நம்மை கொண்டாடும். ஆனால், வெற்றிபெறுவதற்கு முன்பே தகுதியுள்ள வீரர்களைக் கொண்டாடுகின்ற அரசுதான் நம்முடைய முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு ஓர் உதாரணத்தை மட்டும் நான் இங்கே கூற விரும்புகின்றேன். சென்ற ஆண்டு பிரான்ஸ் நாட்டில் பாரீஸ் ஒலிம்பிக்ஸ் பாரா ஒலிம்பிக்ஸ் ஆகஸ்டு மாதம் 2024ல் நடைபெற்றது. அதில் இந்தியா சார்பில் பங்கேற்க தமிழ்நாட்டைச் சேர்ந்த 17 விளையாட்டு வீரர்கள் தகுதி பெற்றனர். அந்த 17 வீரர்களையும் அழைத்து, அவர்கள் போட்டியில் பங்கேற்பதற்கு முன்பாகவே, இங்கிருந்து போவதற்கு முன்பே selection ஆன உடனே Special High Cash Incentivesஆக சிறப்பு ஊக்கத்தொகையாக ஒவ்வொரு வீரர்களுக்கும் தலா ரூபாய் 7 இலட்சத்தை அவர்கள் prepare ஆவதற்கு மட்டுமே 7 இலட்சம் ரூபாயை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

அதுமட்டுமல்ல, தமிழ்நாட்டிலிருந்து இந்த பாரா ஒலிம்பிக்ஸ்ல் பங்கேற்ற, 4 மாற்றுத் திறனாளி வீரர்கள் முதல் முறையாக பதக்கம் வென்றனர். (மேசையைத் தட்டும் ஒலி) பதக்கம் வென்ற பேட்மிண்டன் வீராங்கனைகள் தங்கைகள் துளசிமதி முருகேசன், மனிஷா ராமதாஸ், நித்யஸ்ரீ சிவன் மற்றும் தடகள வீரர் தம்பி மாரியப்பன் தங்கவேலு ஆகியோருக்கு மொத்தம் 5 கோடி ரூபாய் உயரிய ஊக்கத்தொகையை நம் முதலமைச்சர் அவர்கள் உடனடியாக வழங்கி வாழ்த்தினார்கள்.

அதேமாதிரி சர்வதேச மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வெல்கின்ற வீரர்களுக்கு, 3 சதவிகித இட ஒதுக்கீட்டின் அடிப்படையில், முந்தைய ஆட்சியில், வேலை வாய்ப்பு கொடுத்ததாகச் சொன்னார்கள். கொடுத்தது எத்தனை பேருக்கு என்று பார்த்தீர்களென்றால், வெறும் 3 பேருக்கு மட்டுமே வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது. ஆனால், நம்முடைய அரசு அமைந்த பிறகு, இதுவரை மொத்தம் 104 வீரர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

சென்றாண்டு, சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் வென்ற 1,821 வீரர்களுக்கு, 60 கோடியே 14 இலட்சம் ரூபாய் High Cash Incentives உயரிய ஊக்கத்தொகையாக வழங்கப் பட்டுள்ளது.

**தமிழ்நாட்டு வீரர்களின் சாதனைகள்:** இளம் செஸ் வீரர் தம்பி குகேஷ், உலக செஸ் சாம்பியன் பட்டத்தை வென்று, தமிழ்நாட்டுக்கு மட்டுமன்றி, ஒட்டுமொத்த இந்திய ஒன்றியத்திற்கும் இன்றைக்கு பெருமையைத் தேடித்தந்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, மதுரையைச் சேர்ந்த கிரிக்கெட் வீராங்கனை தங்கை கமலினி, இந்திய மகளிர் கிரிக்கெட் அணியில் இடம் பெற்றுள்ளார். மலேசியாவில் சென்ற ஆண்டு நடைபெற்ற Under 19 World Cup போட்டியில், இந்திய அணி உலக கோப்பையை வெல்வதற்கு, தங்கை கமலினியின் சிறப்பான ஆட்டம், மிகச் சிறந்த முக்கிமான காரணமாக இருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டைச் சேர்ந்த தம்பி பிரணவ், அண்மையில் உலக ஜூனியர் செஸ் சாம்பியன் பட்டத்தை வென்றிருக்கின்றார். சமீபத்தில் நடைபெற்ற கோகோ உலகக்கோப்பையில் இந்திய அணி சாம்பியன் பட்டம் வென்றது. இப்போட்டியில், தமிழ்நாட்டைச் சேர்ந்த தம்பி சுப்பிரமணி, இந்தியாவை வெற்றி பெறுவதற்கு மிக மிக முக்கியமான ஒரு player ஆக இருந்தார்.சாதனை படைத்த இந்த 4 வீரர்களுக்கும் மொத்தம் 6 கோடியே 60 இலட்சம் ரூபாய் அளவுக்கு உயரிய ஊக்கத்தொகையை முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல சில தினங்களுக்கு முன்பு, டெல்லியில் நடைபெற்ற Khelo India Para Games 2025 தமிழ்நாட்டு வீரர்கள் முதன்முறையாக ஒட்டுமொத்தமாக points tallyல் இந்திய அளவில் இரண்டாம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி) 28 தங்கம் உட்பட 74 பதக்கங்களை குவித்த மாற்றுத் திறனாளி வீரர்களை இந்த மாமன்றத்தின் வாயிலாக நாம் அனைவரும் நம்முடைய வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

FICCI (Federation of Indian Chambers of Commerce and Industries) சார்பில், 2024 -ஆம் ஆண்டிற்கான, விளையாட்டை ஊக்குவிக்கும் சிறந்த மாநிலத்திற்கான விருது தமிழ்நாட்டுக்கு வழங்கப்பட்டு, கௌரவிக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில், முதன்முறையாக E Sportsஐ demo gameஆக நடத்தியதால், 2025 ஆம் ஆண்டிற்கான ஜெம் (GEM) விருது மும்பையில் தமிழ்நாடு அரசுக்கு சமீபத்தில் வழங்கப்பட்டது.

> “ வெற்றி பெற்றுவிட்டால் நிச்சயமாக இந்த உலகமே நம்மைக் கொண்டாடும். ஆனால், வெற்றிபெறுவதற்கு முன்பே தகுதியுள்ள வீரர்களைக் கொண்டாடு-கின்ற அரசுதான் நம்முடைய முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு. ”

### சென்னையில் நடத்தப்பட்ட சர்வதேச - தேசியப் போட்டிகள்!

சென்ற நிதி ஆண்டில், மொத்தம் 15 கோடி ரூபாய் செலவில் சென்னையில் நடத்தப்பட்ட பல சர்வதேச-தேசிய போட்டிகளின் விவரத்தைப்பற்றி இங்கே குறிப்பிட விரும்புகிறேன். சென்னை

# 6812 அறிவிப்புகளில் இதுவரை 96 சதவிகித அறிவிப்புகளுக்கு அரசாணை!

செஸ் கிராண்ட் மாஸ்டர் 2024, தெற்காசிய இளையோர் தடகளப் போட்டிகள்-South Asian Youth Games, 76வது தேசிய டிராக் சைக்கிளிங் சாம்பியன்ஷிப் போட்டி, Chennai Open ATP Challenger - 100, Asian Triathlon 2025, World Table Tennis Star Contenders, 23rd National Para Athletics Championships 2025, ஆகியவை சென்னையில் நடத்தப்பட்டுள்ளன.

23rd National Para Athletics Championshipsல், தமிழ்நாட்டு வீரர்கள் 47 பதக்கங்களைக் குவித்து, ஒட்டுமொத்த புள்ளிப்பட்டியலில் இரண்டாம் இடத்தைப் பிடித்து சாதனை படைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தெற்காசியாவிலேயே முதன்முறையாக Night Street Circuit கார் பந்தயம் சென்னையில் கடந்த ஆண்டு நடத்தப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் போட்டியை ஏன் நடத்துகிறீர்கள் என்று பல்வேறு விமர்சனங்கள வந்தன;

### விமர்சித்தவர்களே - பாராட்டினார்கள்!

வீண் செலவு என்று சொன்னார்கள்; சிலர் நீதிமன்றத்திற்கெல்லாம்கூட சென்றார்கள்; இன்னும் சொல்லப்போனால், போட்டி நடைபெற்ற அந்தநேரத்தில், பலர் TVயில் பேட்டியெல்லாம் கொடுத்தார்கள்; கார் கூவத்தில் விழுந்தால் என்ன செய்வீர்கள் என்று சிலர் கேட்டார்கள்; சிலர், கார் பார்வையாளர்கள் அமர்ந்திருக்கின்ற Galleryக்குள் புகுந்துவிட்டால் என்னவாகும் என்றெல்லாம் கூறி பொதுமக்களிடத்தில் குழப்பத்தை உண்டாக்கினார்கள்.

ஆனால், யார் யாரெல்லாம் இந்தப் போட்டியை விமர்சித்தார்களோ, அவர்களே பாராட்டுகிற அளவுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) Chennai Formula 4 பந்தயத்தை சிறப்பாக நடத்திக் காட்டினோம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த இரண்டு நாட்களில் மட்டும் சுமார் 12 ஆயிரம் பேர் டிக்கெட் வாங்கி, அங்கிருந்த galleryல் அமர்ந்து, அந்தப் போட்டியை நேரில் பார்த்து ரசித்தார்கள். இதற்கு சென்னை மக்கள் மிகப்பெரிய ஆதரவைத் தந்தார்கள். இந்தப் போட்டியில் 15 நாடுகளிலிருந்து 40 கார் பந்தய வீரர்கள் பங்கேற்றனர்.

ஒருபுறம், வழக்கமான போக்குவரத்து; இன்னொரு புறம், கார் பந்தயம் (மேசையைத் தட்டும் ஒலி) என தீவுத்திடலைச் சுற்றி நடந்த இந்தக் கார் பந்தயம் ஒட்டுமொத்த உலகத்தையே திரும்பிப் பார்க்க வைத்தது. இந்தப் போட்டியை நாம் நடத்திக்காட்டிய விதம், எந்த மாதிரியான சவாலான போட்டிகளையும் நம்மால் எளிதில் நடத்த முடியும்; (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கான ஆற்றல் நம்மிடம் இருக்கிறது என்பதற்கு இதுவொரு சான்றாகும்.

### 100 பதக்கங்கள் வென்று பெருமை தேடித் தந்தனர்!

தமிழ்நாட்டு வீரர்களின் திறமைக்கு பொருளாதாரம் ஒரு தடையாக இருக்கக் கூடாது என்று முதலமைச்சர் அவர்கள், கடந்த 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையை தொடங்கி வைத்தார்கள். தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைக்கு இதுவரை 28 கோடி ரூபாய் நன்கொடையாக பெறப்பட்டுள்ளது. கடந்த ஓராண்டில் மட்டும் விளையாட்டு வீரர்களின் தேவை அடிப்படையில், 16 கோடியே 56 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. நிதி உதவி பெற்ற வீரர்கள் சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் மொத்தம் 100 பதக்கங்களை வென்று தமிழ்நாட்டிற்கும், இந்திய ஒன்றியத்திற்கும் பெருமைதேடித் தந்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு சாம்பியன்ஸ் ஃபவுண்டேசன் எந்த அளவுக்கு நம்முடைய வீரர்களின் வாழ்வை மாற்றுகிறது என்பதற்கு ஒரு சிறந்த சிறு உதாரணத்தைக் கூற விரும்புகின்றேன். வட சென்னையைச் சேர்ந்த கேரம் வீராங்கனை தங்கை காசிமா; அவருடைய தந்தை ஆட்டோ ஓட்டுநராக இருக்கின்றார். அமெரிக்காவில் நடைபெற்ற உலகக் கோப்பை கேரம் போட்டியில் பங்கேற்கின்ற வாய்ப்பு அவருக்கு கிடைத்தது. ஆனால், அவருக்கு, அதற்கான பயணத்திற்கும், தங்குவதற்கும், பயிற்சிக்குமான செலவிற்கு நிதி உதவி இல்லை. இதுபற்றி எங்களுடைய துறைக்கு கோரிக்கை வைத்தவுடன், உடனடியாக, அடுத்த நாளே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதன் அடிப்படையில், 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வழங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) அவரை உலகக் கோப்பை கேரம் போட்டியில் பங்கேற்க அமெரிக்கா அனுப்பி வைத்தோம். நிதி பெற்றுச் சென்ற தங்கை காசிமா அவர்கள், உலகக் கோப்பையை வென்று தமிழ்நாடு திரும்பினார். (மேசையைத் தட்டும் ஒலி)

### தேவைப்பட்டால் - போட்டிகளில் பங்கேற்க நிதி உதவி!

நம்முடைய முதலமைச்சர் அவர்கள், உடனடியாக அவரைப் பாராட்டி, (மேசையைத் தட்டும் ஒலி) 1 கோடி ரூபாயை High Cash Incentives ஆக வழங்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுபோல, நூற்றுக்கணக்கான காசிமாக்கள் உருவாக நம்முடைய தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை தொடர்ந்து துணை நிற்கும். ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்கள், தங்களுடைய தொகுதிகளில், விளையாட்டு வீரர்கள் யாருக்காவது போட்டிகளில் பங்கேற்க நிதி உதவி தேவைப்பட்டால், அவர்களை, www.tnchampions.sdat.in என்ற இணையதளத்தில் தயவுசெய்து விண்ணப்பிக்கச் சொல்லுங்கள். நிச்சயம் அவர்களின் திறமைக்கு ஏற்ப, (மேசையைத் தட்டும் ஒலி) நிதி உதவி அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விளையாட்டினை மாபெரும் மக்கள் இயக்கமாக்கும் விதமாக, முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை தொடர்ந்து நடத்தி வருகின்றோம். கடந்த ஆண்டு, இதற்காக 83 கோடியே 37 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. முந்தைய ஆட்சி காலத்தில் முதலமைச்சர்

கோப்பை விளையாட்டுப் போட்டிகளுக்கு பரிசுத் தொகையாக 8 கோடி ரூபாய் மட்டுமே வழங்கப்பட்ட நிலையில், நம்முடைய திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு ஒவ்வோராண்டும் கிட்டத்தட்ட 35 கோடி ரூபாய் அளவுக்கு வெறும் பரிசுத் தொகை மட்டுமே வழங்கப்பட்டு வருகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் போட்டிகளில் கடந்த ஆண்டு பங்கேற்றவர்கள் 5 இலட்சம் வீரர்கள். இந்தாண்டு சுமார் 12 இலட்சம் வீரர்கள் கலந்து கொண்டு சாதனை படைத்திருக்கிறார்கள். இதுவே இத்திட்டத்திற்கான வெற்றி என்பதை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

பாரா விளையாட்டுகளை ஊக்குவிக்கும் வகையில், நாட்டிலேயே முதன்முறையாக சென்னை திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம், கடலூர் மற்றும் திருநெல்வேலி என 6 மாவட்டங்களில் ParaSports Arena அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதற்காக மொத்தம் 5 கோடி ரூபாய் நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த பாரா விளையாட்டு மைதானங்களுக்கான பணிகள் இன்னும் 3 மாதங்களில் முடிவுற்று, மக்கள் பயன்பாட்டிற்கு வரவுள்ளன என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

### நாட்டிலேயே முதலாவதாக பாரா விளையாட்டு மைதானங்கள்

நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் ரவி அவர்கள் நேற்று பேசியபோது, புதிய விடுதிகள் திறக்கப்படவில்லை என்றும், விடுதிகளில், Sports Hostelsல் மாணவர்களின் எண்ணிக்கை குறைவதாகவும் ஒரு கருத்தைக் கூறி இருந்தார்கள். நம்முடைய அரசு அமைந்த இந்த 4 வருடங்களில், இதுவரை 6 புதிய விடுதிகள் (மேசையைத் தட்டும் ஒலி)மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி ஸ்டேயத்தில் ஒன்றும், SDAT Tennis stadium, நுங்கம்பாக்கத்தில் ஒன்றும், SDAT Aquatic complex, வேளச்சேரியில் ஒன்றும், Sports University, செங்கல்பட்டில் ஒன்றும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஒன்றும், சேலம் மாவட்டத்தில் ஒன்றும் என இதுவரையில் 6 புதிய விடுதிகளை நம்முடைய அரசு அமைந்த பிறகு தொடங்கியிருக்கிறோம். தற்போது 40 விடுதிகள் உள்ள நிலையில், வரும் ஆண்டில் புதிய விடுதிகளை கூடுதலாகத் திறக்கவுள்ளோம்.

மேலும், விடுதி மாணவர்களுக்கான உணவுப்படியை நாளொன்றுக்கு தலா ஒருவருக்கு 250 ரூபாய் என்றிருந்தை நம்முடைய அரசு சென்ற வருடம் 350 ரூபாயாக உயர்த்திக் கொடுத்தது. (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த 4 ஆண்டுகளில், நம்முடைய துறை அரசு எடுத்த முயற்சியால், விடுதியில் இருக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை, 2,300லிருந்து இன்றைக்கு 2,600 ஆக உயர்ந்துள்ளது என்பதை இங்கே தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

### 22 சட்டமன்றத் தொகுதிகளில் மினி ஸ்டேடியம்

விளையாட்டுக் கட்டமைப்பை தமிழ்நாடெங்கும் பரவலாக்கம் செய்திட, சட்டமன்றத் தொகுதிகள்தோறும் Mini Stadiums அமைக்கப்படும் என்று நாம் 2022 -2023 ஆம் ஆண்டில் அறிவித்திருந்தோம். முதற்கட்டமாக 9 சட்டமன்றத் தொகுதிகளில் நிலம் தேர்வு செய்யப்பட்டு, அதில் சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி, சோழவந்தான், திருவைகுண்டம் மற்றும் காரைக்குடி ஆகிய தொகுதிகளில் Mini Stadium கட்டி முடிக்கப்பட்டு ஏற்கெனவே

திறந்து வைக்கப்பட்டுள்ளது. அதேபோல், கொளத்தூர், வாணியம்பாடி, காங்கேயம், பத்மநாபபுரம் மற்றும் ஆலங்குடி ஆகிய 5 தொகுதிகளிலும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. விரைவில் அங்கேயும் Mini Stadiums திறந்து வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

22 சட்டமன்றத் தொகுதிகளில் Mini Stadium அமைக்கப்படும் என்று கடந்தாண்டு சட்டமன்றப் பேரவையில் அறிவித்திருந்தோம். அதற்கான பணிகள் விரைவில் தொடங்கவுள்ளன. அதுமட்டுமல்ல, நிலம் இருக்கின்ற அனைத்து தொகுதிகளிலும் மினி ஸ்டேடியங்களை அமைக்க நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள், அவருடைய இராதாபுரம் தொகுதியில் ஸ்டேடியம் அமைக்க வேண்டுமென்று கேட்டுள்ளீர்கள். இராதாபுரத்தில் சர்வதேச தரத்திலான ஸ்டேடியம் அமைப்பதற்கான அறிவிப்பை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே வெளியிட்டுள்ளார்கள். இதற்காக நிதியொதுக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, விரைவில் பணிகள் தொடங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

உறுப்பினர் நீலமேகம் அவர்கள், தஞ்சை மாவட்ட விளையாட்டு அரங்கத்தில், Synthetic Athletic Track அமைக்கும் பணியை விரைந்து முடிக்க நேற்றையதினம் கோரிக்கை வைத்திருந்தார். அந்தப் பணிகள், வரும் ஏப்ரலுக்குள் முடிக்கப்பட்டு, விரைவில் விளையாட்டு வீரர்களின் பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்படும் என்ற உறுதியை இந்த நேரத்தில் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

### கோபாலபுரத்தில் - கலைஞர் குத்துச் சண்டை அகாதமி

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வாழ்ந்த கோபாலபுரத்தில், கலைஞர் குத்துச்சண்டை அகாடமி அமைக்கப்படும் என்று சென்ற ஆண்டு சட்டமன்றப் பேரவையில் அறிவித்திருந்தோம். அதன் அடிப்படையில், 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சர்வதேச தரத்தில் கட்டப்பட்டுள்ள, கலைஞர் பாக்சிங் அகாடமியை, முதலமைச்சர் அவர்கள் கடந்த மாதம் திறந்து வைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, தமிழ்நாட்டில் உள்ள 12,525 கிராம ஊராட்சிகளுக்கும் 'கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்ஸ்' வழங்குவோம் என்று சட்டமன்றப் பேரவையில் அறிவித்திருந்தோம். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆட்சியில், வெறும் 4 விளையாட்டுக்களுக்கான sports kids தான் கொடுக்கப்பட்டது. அந்த நிலையில், கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட் திட்டத்தின்கீழ், 10 வகையான விளையாட்டுகளுக்குத் தேவையான 33 sports kidsஐ நாம் தொடர்ந்து வழங்கியிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)

### ஒரே ஆண்டில் 17,000'கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்'

அனைத்து மாவட்டங்களிலும், ஒரே ஆண்டில், கிட்டத்தட்ட 17,000 எண்ணிக்கையிலான கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்ஸ் தொகுப்பினை கொடுத்திருக்கிறோம். வரும் ஆண்டில், நகர்ப்புறங்களிலும், கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட் திட்டத்தின்கீழ், விளையாட்டு உபகரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

இப்படியாக தமிழ்நாட்டில் விளையாட்டுத் துறையின் வளர்ச்சி புதிய உயரங்களை தொட்டிடும் வகையில் நம்முடைய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அயராது பாடுபாட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் நான் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

எனது உரையை முடிக்கும் முன்பு, முக்கியமான ஒரேயொரு பதிவை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். இன்றைக்கு, நம்முடைய திராவிட மாடல் அரசின் திட்டங்களால், தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு வீட்டிலும், குறைந்தது ஒருவராவது பயன்பெற்று வருகிறார்கள். இதுதான் உண்மையான மக்கள் ஆட்சிக்கான அடையாளம். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பின்னால், ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களும் அணி திரண்டு நிற்கின்றார்கள். பதவிக்காக அரசியலுக்கு வந்தவர் இல்லை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அரசியலில் நம்முடைய தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு கிடைத்த முதல் பதவியே, 'மிசா சிறைவாசம்'. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவினுடைய ஜனநாயகத்தைக் காக்க, 50 ஆண்டுகளுக்கு முன்பு, தன்னுடைய அரசியல் பயணத்தை தொடங்கிய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இன்றைக்கும் இந்தியாவினுடைய ஜனநாயகத்தை காக்கின்ற களத்தில் நிற்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 1938 ஆம் ஆண்டில் தந்தை பெரியார் அவர்கள் இந்தி எதிர்ப்பு போரை தொடங்கி வைத்தார்கள். 1960 ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் மாணவர்கள் இந்தி எதிர்ப்பு போரினை முன்னின்று நடத்தினார்கள். தமிழுக்காக தண்டவாளத்தில் தலை வைத்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், ஐம்பெரும் முழக்கங்களில் ஒன்றாக, இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம் என்று முழங்கினார்கள். பெரியார், அண்ணா, கலைஞர் அவர்களுடைய ஒட்டுமொத்த உருவமாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) 1930 ஆம் ஆண்டில் தொடங்கிய இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போரை, நம்முடைய காலத்தில் நிச்சயம் முடித்து வைப்பார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த நேரத்தில் எனக்கு வாய்ப்பளித்த முதலமைச்சர் அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, தலைமைச் செயலாளர் முருகானந்தம் ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், நிதித் துறைச் செயலாளர் உதயச்சந்திரன் ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், என்னுடைய துறைச் சார்ந்து என்னுடன் பயணிக்கின்ற அதிகாரிகள் அதுல்ய மிஸ்ரா ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், ரமேஷ் சந்த் மீனா ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், பிரதீப் யாதவ் ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், ககன்தீப் சிங் பேடி ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், திருமதி ஜெயா ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், திருமிகு ஆர்த்தி ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், திருமிகு சஜீவனா ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், மேகநாத ரெட்டி ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், ஸ்ரேயா சிங் ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், கிராந்தி குமார் பட்டி ஐ.ஏ.எஸ். ஆகியோருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், என்னுடைய உதவியாளர்கள் மணிராஜ், செந்தில், மணிகண்டன் அவர்களுக்கும் இந்தநேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, முதலமைச்சர் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் என்று கூறி என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**பேரவைத் தலைவர்: நாட்டு மக்கள் பயன்படும்படி நல்ல பதிலுரையை தந்த நம்முடைய துணை முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.**